# கன்னியாகுமரி மாவட்டப் பொதுத் தேர்வுகள்

## இரண்டாம் திருப்புதல் பொதுத்தேர்வுகள் -பிப்ரவரி 2012

**வகுப்பு 10** மொத்த மதிப்பெண்கள்:100

தமிழ் முதல் தாள்(செய்யுள் -உரைநடை)

பிரிவு-I (மதிப்பெண்கள்-20)

பகுதி-1

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதக.**

1) செல்வத்தை நிலையாகக் காட்டும் கயிறாக வள்ளுவர் கூறுவது

அ) ஒழுக்கம் ஆ) காலமறிதல்

இ) அடக்கமுடைமை ஈ) பெரியாரைத் துணைக்கோடல்

2) நற்றிணை…………..நூல்களைச் சாரந்ள்ளது.

அ) பத்துப்பாட்டு ஆ) பதினெண்கீழ்க்கணக்கு

இ) எட்டுத்தொகை ஈ) இலக்கணம்

3) திறனறிந்து தேர்ந்து கொள்ள வேண்டியவர்……………..

அ) அன்புள்ள பெற்றோர் ஆ) ஆர்வமுள்ள நண்பர்

இ) மூத்த அறிவுடையார் ஈ) பகைவர்

4) குலசேகராழ்வார் பாடல் ……………… தொகுப்பில் உள்ளது.

அ) திருவியற்பா ஆ) முதலாயிரம்

இ) பெரிய திருமொழி ஈ) தேவாரம்

5). அறநெறியாகப் போற்றப்பட வேண்டியவை…………….

அ) ஆடம்பரம், வீண்செலவு ஆ) எளிமை, சிக்கனம்

இ) பண்பு, பாசம் ஈ) அன்பு, அருள்

6) தமிழர் நிலத்தை………….. வகையாகப் பிரித்தனர்.

அ) 3 ஆ) 2 இ) 4 ஈ) 5

பகுதி-2

**கோடிட்ட இடத்தை நிரப்புக.**

7) இரட்டை காப்பியங்கள் என்பன சிலப்பதிகாரமும்………….. ஆகும்.

8) பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ எனப் பாடியவர்………

9) போலிப்புலவர்களைத் தலையில் குட்டுபவர்…………….

10) இலெமூரியாவை …………………என்பர்.

11) நாள்தோறும் கல்வியில் ……………….உண்டாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

12) இயக்கப்படங்கள் பார்ப்பதற்கு………………இருக்கும்.

பகுதி-3

**பொருத்துக.**

13) இடர் - நிலவு

14) நாவாய் - துன்பம்

15) இறை - படகு

16) இந்து - தலைவன்

பகுதி-4

**தொடருக்கு ஏற்ற வினாத்தொடர் அமைக்க**

17) செய்திப்படங்கள் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டுகளிக்கலாம்

18) தமிழர்கள் அரபு நாட்டுடனும் யவன நாட்டுடனும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்.

19) இலக்கணம் வகுத்த பின்பே இலக்கியங்கள் தோன்றின.

20) தொழில்நுட்ப பயிலகத்தில் பயில்வோருக்கு நிறைய வேலைவாய்ப்புகள் உண்டு.

## பிரிவு-II (மதிப்பெண்கள்-20)

### பகுதி-I

**கீழுள்ள வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் எழுதுக.**

21) காலம் கருதினும் கைகூடும் எப்போது?

22) பழியிலா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை?

23) குகனின் வேண்டுகோள் யாது?

24) அப்பூதியடிகள் எத்தகைய பண்பாளர்?

25) வுயலின் வரப்புகளாகக் கூறப்படுவன யாவை?

26) தேவாரம்- பொருள் தருக.

27) நுந்திக்கலம்பகம் யார் மீது பாடப்பெற்றுள்ளது?

**கீழுள்ள வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.**

28) தமிழ்மொழியின் தனித்தன்மைகளை எழுதுக.

29) மொழிமாற்றம் என்றால் என்ன?

30) ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை?

31) ஞாலம்- பெயர்க்காரணம் கூறுக.

32) காந்தியடிகளுக்கு இளம்பருவத்திலேயே இயல்பாக அமைந்த உயர் பண்புகள் யாவை?

33) வள்ளலாரின் முழக்கம் யாது?

34) வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தரும் அமுதசுரபியாக விளங்குபவை எவை?

## பிரிவு-III (மதிப்பெண்கள்-24)

### பகுதி-1

**கீழுள்ள வினாக்களுள் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க**

35) சிலப்பதிகாரம் காட்டும் சோழநாட்டு மன்னர்களின் சிறப்பு யாது?

36) சீதை, இலக்குவன் ஆகியோரிடம் குகனைப் பற்றி இராமன் கூறியதென்ன?

37) சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை?

38) வயல் தரும் விளைவுகள் யாவை?

39) சாதனைப் பூக்கள் என்று எவற்றைச் சாலையார் சுட்டுகிறார்?

### பகுதி-2

**கீழுள்ள வினாக்களுள் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க**

40) மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை?

41) அம்பேத்கார் பெற்ற கல்வித் தகுதிகள் யாவை?

42) மேடைப்பேச்சின் திறம் குறித்துக் குறள் கூறும் கருத்து யாது?

43) கடல் வாணிகம் குறித்து எழுதுக.

44) மனித நேயம் குறித்து காந்தியடிகள் கூறியது யாது?

**பிரிவு-IV (மதிப்பெண்கள்-10)**

45) **கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க**

அரிகால் மாறிய அங்கண் அகல்வயல்
மறுகால் உழுத ஈரச் செறுவின்
வித்தொடு சென்ற வட்டி பற்பல
மீனொடு பெயரும் யாணர் ஊர

(i) இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது? ii) சென்ற வட்டி-இலக்கண குறிப்பு

(iii) இப்பாடலில் குறிப்பிடப்படும் நிலம் யாது? (iv) அங்கண் பிரித்தெழுதுக.

(V) அரி என்பதன் பொருள் தருக.

46) **கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க**

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்னும் வள்ளுவர் வாய்மொழியை நன்குணர்ந்தவர் பெரியார். ஒரு நாடு வளத்துடன் இருக்க வேண்டுமானால் அந்த நாட்டு மக்கள் அனைவரும் ஒத்த ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும். ஒழுக்கமென்பதும் கற்பதென்பதும் பெண்களுக்கு மட்டும் என்றில்லாமல் ஆண், பெண் இருபாலர்க்கும் பொதுவாகும் என்பது அவர்தம் கருத்து.

பெரியார் சமூக முரண்களை எதிர்த்தவர்; மூடக்கருத்துகளை முட்டருத்தவர்; தொலைநோக்கு பார்வையுடையவர்; பகுத்தறிவுக்கு பொருந்தாதவற்றை அறுத்து எறிந்தவர்; சமூக மாற்றத்தை விரும்பியவர்; பெண்களே சமூகத்தின் கண்கள் எனக் கருதியவர்; பெண்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டவர். பெரியார் வழிகாட்டுதலால் தமிழகம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது.

i) உயிரைவிட சிறந்ததாக எது போற்றப்படுகிறது.?
ii) பெரியார் எவற்றை எதிர்த்தார்?
iii) ஓம்பப்படும்- பொருள் யாது?
iv) பெண்கள் எவ்வாறு போற்றப்படுகிறார்கள்?
v) இவ்வுரைப்பகுதிக்கு தலைப்பு ஒன்று தருக.

**பிரிவு-V (மதிப்பெண்கள்-26)**

**பகுதி-1**

**கீழக்காணும் வினாக்களுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க:**

47) அ) ‘தேரா மன்னா’என விளித்துக் கண்ணகி கூறியன யாவை?

**(அல்லது)**

ஆ) பொருளினது சிறப்பு, பொருளீட்டும் நெறி, பயன்கள் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

48) அ) தமிழ் செம்மொழிக்குரிய பதினொரு தகுதிப்பாடுகளையும் பெற்றுள்ளது என்பதை நிறுவுக.

**(அல்லது)**

ஆ) தொழிற்கல்வி, தொழில் நுட்பக்கல்வி குறித்து விரிவாக எழுதுக.

பகுதி-2

49) **செய்யுள் வடிவில் விடையளிக்க**

அ)‘செய்க பொருளை’ எனத் தொடங்கும் குறள்

ஆ)‘செயல் என முடியும் குறள்.

இ) “மீன் நோக்கும்”- எனத் தொடங்கும் நாலாயிரத் திவ்வியபிரபந்தம் பாடல்.

…………...